// இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அநுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,072 — 1934 ம் ௵ ஆவணி௴ 10 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

# Part IV.—நான்காம் பாகம்.

---

## காணிக் குத்தகை விற்பனை அறிவித்தல்.

1934 ம் ஆண்டு ஆடி மாசம் 6 ந் திகதி கொண்ட 8,062 ம் இலகக அரசாட்சி " கெசெற் " பத்திரிகை நான்காம் பாகத்தில் 192 ம் பக்கத்தில் அறிவித்தல் கொடுத்தபடி மகா ஓயா வாடிவீட்டில் 1934 ம் ஆண்டு ஆவணி மாசம் 20 ந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடத்தவிருக்கும் காணிக் குத்தகை விற்பனவு, 1934 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 24 ந் திகதி திங்கட்கிழமை அதே இடத்திலும் நேரத்திலும் நடத்தப்படும் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ஆண்டு ஆவணி மாசம் 6 ந் திகதி.

சீ. வீ. பிறேயின்,
காணிக் கொம்மிஷனர்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அகத்திமுறிப்புப் பெரியவாய்க்காலின் 7 ங் கட்டை யடியில் ஒரு பகுதியை வெட்டுவதற்கும் அதற்காக விடுவதற்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 517. குறிச்சி—வேப்பங்குளம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வில்லங்கமம் .. | வயல் (செய்யாமல் விடப்பட்டது) .. | பன்னைவெட்டுவான், மரிசால் அந்தோனிப்பிள்ளை | 1 | 3 | 21 |
| 2 | ஷை .. | வயல் .. .. | பன்னைவெட்டுவான, மரிசால் தொம்மைப்பிள்ளை | 2 | 1 | 10·1 |
| 4 | ஷை .. | வயல் (செய்யாமல் விடப்பட்டது) .. | ஷை .. .. | 0 | 3 | 1·9 |
| 5 | ஷை .. | ஷை .. | சட்டைக்காடு, பிலிப்பு பாவிலுப்பிள்ளை | 2 | 1 | 23·7 |
| 6 | ஷை .. | வயல் .. .. | ஷை .. .. | 0 | 0 | 12·9 |
| 7 | ஷை .. | வயல் (செய்யாமல் விடப்பட்டது) .. | ஷை .. .. | 0 | 0 | 12·6 |
| 8 | ஷை .. | ஷை .. .. | பன்னைவெட்டுவான், மரிசால் அந்தோனிப்பிள்ளை | 0 | 1 | 1 |
| 9 | ஷை .. | வயல் .. .. | சட்டைக்காடு, பிலிப்பு பாவிலுப்பிள்ளை | 0 | 3 | 18·3 |
| 10 | காட்டுக்காணி .. | சிறுகாடு .. .. | பன்னைவெட்டுவான், சந்தியா அந்தோனிப்பிள்ளை | 1 | 1 | 34 |
| 11 | ஷை .. | ஷை .. .. | ஷை .. .. | 2 | 0 | 33 |

எடுத்துககொள்வதறகான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏறபாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 8 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு முருங்கன் வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத தத்தமக்கு அககாணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் அக்காணிகளைப்பற்றிய உறுதிகளைக் கொண்டுவந்து காட்டும்படிக்கும் இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

மன்னார் கச்சேரி,
1934 ம் ௵ ஆவணி௴ 6 ந் உ.

ஆர். வை. டேனியல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் 10 ங் கட்டையடியில் பறங்கியாறு மூண்டுமுறிப்புத் தெருவை விலகச்செய்வதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 527. குறிச்சி—மூண்டுமுறிப்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பாலையடிவளவு .. | வெறுங்காணி .. | மூண்டுமுறிப்பு, என். சின்னச்சியும், என். வீரேசுவும் | 0 | 0 | 3·3 |
| 2 | ஷை .. | ஷை .. | மூண்டுமுறிப்பு, என். பாறுவதி .. .. | 0 | 0 | 4·9 |
| 3 | ஷை .. | 9 பனங்கன்றுகள் உள்ள பனங்காணி | ஷை .. .. | 0 | 0 | 5·6 |
| 4 | ஷை .. | வெறுங்காணி .. | ஷை .. .. | 0 | 0 | 7·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆடு (செப்றெம்பர்) புரட்டாதி மாசம் 14 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு மூண்டுமுறிப்பில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மன்னார் கச்சேரி,
1934 ம் ஆடு ஆவணிமீ 6 ந் உ.

ஆர். வை. டேனியல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யக்வில–கும்புக்கஹமுல றோட்டின் 3 ம் கட்டையடிக்குத் தேவையான கல்குழி என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

படத்து இல. 303 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்தின் 3 ம் இலக்க அநுபந்தம். குறிச்சி—வடமேன் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் கறதுகம்பொல ஹற்பத்துவில் மதிப்பற்று கோறளை மேறகில் உள்ள கெடலகொமுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 6A | அங்கன்பிற்றியவத்த .. | தென்னந்தோட்டம் .. | திரு. எஸ். பி. சிற்றிநாயக்க, பானிஸ், கொள்ளுப்பிட்டி | 0 | 3 | 35·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆடு (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 5 ந் தேதியிலன்று காலை 10½ மணிக்கு குளியாப்பிட்டி வாடிவீட்டில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1934 ம் ஆடு (ஆகஸ்ற்) ஆவணிமீ 4 ந் உ.

என். ஈ. ஏர்ன்ஸ்ற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருநாக்கல் டிஸ்திறிக்.

---

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு கிராம வழி திறப்பதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

கடைசிக் கிராமப்படத்து இல. 36 க்கு சப்பிளிமென்ற் இல. 3. குறிச்சி—வதுளை டிஸ்திறிக், கும்பல்வெல கோறளை, கல்பே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 33M1 | செல்சிதோட்டம் .. | பிறையிடில் றோட்டின் ஒரு பாகமடங்கியசேனவும், 3–5 வயசுள்ள 18 தேயிலை மரங்களும் | மெஸ் ஜோர்ஜ் கொக்ச், செல்சி தோட்டம், பண்டாரவெல | 0 | 0 | 11 |
| 33N1 | — .. | 77 தேயிலை மரங்களும், 3 வயதுள்ள 12 கிறவிலியா மரங்களும், 36 தேயிலை மரங்களும், 2–4 வயசுள்ள 5 கிறவிலியாமரங்களு மடங்கிய பிறையிடில் றோட் | ஷை .. | 0 | 3 | 15 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1934 ம் ஆடு புரட்டாதி மாசம் 28 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1934 ம் ஆடு ஆவணிமீ 3 ந் உ.

கார்ன்றன் எஸ். கொறயா,
உதவி அரசாட்சி ஏசண்டு, ஊவா.

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

1934 ம் ஆண்டு புரட்டாதிமீ 1 ந் திகதி தொடக்கம் 30 ந் தேதி வரைக்கும் நிலாவெளியிலிருந்து திருகோணமலை உப்புக் குதங்களுக்கு அதாவது ரேகுத்தரை என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள குதங்களுக்கு 10,000 அந்தர் உப்பு ஏற்றுமதிசெய்ய ஒப்பந்தங்கள் ஏற்கப்படும்

2 ஒப்பந்தக்காரர் உப்பை நிறுத்து ஏற்றுக்கொள்வர். ஒப்பந்தக்காரர் கொண்டுவரும் சாக்குகளில் நிறுத்து விடுவர்.

3. சட்டி திராசுகளினால் உப்பு நிறுக்கப்படும் இதற்குத் தேவையான வேலையாட்கள் கொந்திருத்துக்காரன் கொடுக்கவேண்டும்.

4. உதவி இராஜகாரியஸ்தரது அறிவித்தல் ஒப்பந்தக்காரரது திருக்கோணமலை விலாசத்தில் கிடைத்த ஒரு கிழமையில் ஏற்றுமதி ஆரம்பித்தல் வேண்டும். ஒப்பந்தக்காரரது திருக்கோணமலை விலாசம் இவ்வொப்பந்தத்தின் எவ்வறிவித்தலும் கொடுக்க ஏற்க போதியதாக விருக்கும்.

5. நிறுவை குதச்சேர்வை உட்பட அந்தர் ஒன்றுக்கு ஒப்பந்த விகிதம் இன்னதென்று காட்டல் வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் நாளாந்தம் 400 அந்தருக்குக் குறையாததும் உப்பு ஏற்றுமதி செய்தல் வேண்டும்.

7. ஒப்பந்த பத்திரத்தைக்கொண்ட உறையின் இடப்பக்க மேல் மூலையில் " உப்பு ஏற்றுமதி செய்தற்கு ஒப்பந்தம் " என்று எழுதி அப்பத்திரத்தை 1934 ம் வருஷம் ஆவணி மாதம் 27 ந் திகதி, திங்கட்கிழமை மத்தியானம் திருக்கோணமலை உதவி இராஜகாரியஸ்தர் கந்தோரில் கிடைக்கத்தக்கதாய் அனுப்பல் வேண்டும்.

8. திருக்கோணமலை உதவி இராஜகாரியஸ்தருக்கு ஒப்பந்த மூலப்பிரதி அனுப்பிய திகதியிலேயே கொழும்பு உப்பு அட்வைசரவர்கட்கு இணைப்பிரதி தபால் மார்க்கமாயனுப்பப்படல் வேண்டும்.

9. திருக்கோணமலைக் கச்சேரியில் கேட்டுப்பெறும் அச்சுப்பிரதிகளிலேயே ஒப்பந்தம் எழுதல்வேண்டும். அப்படி எழுதியனுப்பப்படாத ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

10. திருக்கோணமலைக் கச்சேரியில் ரூபா ஐம்பது (ரூபா 50) கட்டிய பற்றுச்சீட்டுக்காட்டிய ஒப்பந்த அச்சுப் பிரதிகள் பெறுக்கொள்ளல் வேண்டும். யாதொரு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் உதவி இராஜகாரியஸ்தர் அல்லது அவரது தத்துவம்பெற்ற பிரதிகாரியஸ்தர் எழுதிய அறிவித்தல் கிடைத்த ஏழு நாளில் ஒப்பந்தம் உடன்படிக்கை நிறைவேற்றவுந் தகுந்த பிணை கொடுக்கவும் எவரும் தவறினால் மேற்சொல்லியபடி கட்டிய தொகையை இழந்து விடுவதுமன்றி அப்படித் தவறியவர் அரசாட்சி ஒப்பந்தங்கள் எவற்றினும் எக்காலத்திலும் சேராதபடி தவறியவர் தாம் அட்டவணையில் அவருடைய பெயர் எழுதப்பட நேரிடும் ஒப்பந்தம் கையொப்பமிட்ட பின் கட்டிய ரூபா 50 கொடுக்கப்படும்.

11. ஒப்பந்தப்படி ஏற்பாட்டை நிறைவேற்றுதற்குப் பிணைப்பட உடன்படும் இரண்டு தகுந்த ஆட்களது கையொப்பமும் விலாசமுமிட்ட கடிதம் ஒன்று ஒவ்வொரு ஒப்பந்தப் பத்திரத்தோடும் அணைக்கப்படல் வேண்டும்.

12. ஒப்பந்த ஏற்பாட்டை சரிவர நிறைவேற்றப் பிறப்பிக்கப்படும் சீட்டில் போதிய பிணைகாரர் கையொப்பமிடல் வேண்டும். சீட்டின் தொகையும்வேறு விபரங்களும் திருக்கோணமலைக் கச்சேரியில் கேட்டு அறியலாம்.

13. மேற்குறித்த நிபந்தனைகள் யாவும் யதார்த்தமாய் நிறைவுற்றாலன்றி ஒப்பந்தப்பத்திரங்கள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

14. யாதும் ஆட்சேபமின்றி ஒப்பந்த பத்திரங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் தள்ளிவிடும் உரித்தையும் ஒப்பந்தத்தில் ஓர் பகுதியை ஏற்கும் உரித்தையும் அரசாட்சியார் உடையர்.

15. அரசாட்சி ஒப்பந்தகாரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட ஏதொருவருக்கும் ஒப்பந்தம் ஒன்றும் தனித்தும் வேறு ஆட்களுடனாவது கொடுக்கப்படமாட்டாது, அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரனின் கழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் ஏதொருவரையும் அல்லது திருக்கோணமலை உதவி அரசாட்சி ஏசன்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களினிமித்தம் எழுத்தில் தடைபண்ணிய வரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கப்படாது.

டப்ளியு. ரீ. ஹூஸ்,
திரு உதவி அரசாட்சி ஏசன்றுக்காக.

திருகோணமலைக் கச்சேரி,
1934 ம் ௵ ஆவணிமீ 2 ந் ௳.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

களுத்துறை டிஸ்திறிக்கைச்சேர்ந்த பாணந்துறை தொட்டமுனை, வாதுபத்த மேற்கு, மா. வாதுவையில் குடியிருக்கும் முதலிபேருவே ஹேவாவசமே சந்திரபாண்டிகே ஸ்ட்டனிஸ் லாவுஸ் பர்ணாந்து என்ற நான் இன்று துவக்கம் மூன்று மாதத்திற்குள் 1907 ம் ஆண்டு முதலாம் நம்பர் கட்டளைச் சட்டத்தின் 1 B அட்டவணையில் 2 ம் பிரமாணத்தின் பிரகாரம் பதிவுகாரியஸ்தர் அவர்களுக்கு என்னைச் சிங்களப் பாஷையில் வதுளை டிஸ்திறிக பிரசித்த நொத்தாரிசாக பிரவேசம்பண்ணுவிக்கவும் பேர் பதியும்படியும் விண்ணப்பம் செய்ய எண்ணியிருக்கிறேன்.

இங்ஙனம்,
எம். ஸ்ட்டனிஸ் லாவுஸ் பர்ணாந்து.

1934 ம் ௵ ஜூன்மீ 1 ந் ௳.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.